**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 81/2018** | | |
| **PW/DW/CW** | : | **PW10** | | |
| **Name** | : அ. பாலசுப்பிரமணியன் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : அழகர்சாமி | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s. 355 of BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.01.2025

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது எழுமலை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.01.2018ம் தேதி உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு மருத்துவமனையில் சகாதேவன் 56/2018 என்பவர் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் அரசு மருத்துவமனைக்கு காலை 11.15 மணிக்கு சென்று அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையத்திற்கு 12.00 வந்து அந்த புகார் வாக்குமூலத்தின் . தன்மைக்குகேற்ப நிலைய குற்ற எண் 13/2018 பிரிவுகள் 294(b),324,506(ii) இதசவாக வழக்கு பதிவு செய்தேன். (அந்த புகார் வாக்குமூலம் மற்றும் முதல்தகவல் அறிக்கை ஏற்கனவே **அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது).

2) அன்றைய தினமே 13.00 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வை மகசர் சாட்சிகள் மதிவாணன், திவ்யா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ 3 மற்றும் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிற**து). சம்பவ இடத்தை நான் பார்வையிட்ட போது புகார்தாரர் சகாதேவனை எதிரி தவம் குத்த பயன்படுத்திய 25 செ.மீ மரக்கைபிடியுடன் கூடிய பட்டன் கத்தியை சம்பவ இடத்தில் விட்டுவிட்டு சென்றதை நான் சாட்சிகள் மதிவாணன், திவ்யா ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். (**அந்த அத்தாட்சி அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் ஸ்டெல்லா கண்ணகி, மதிவாணன், திவ்யா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு

செய்தேன். எனது முதல் கட்ட விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் குணசீலன் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

3) அ.சா.1ற்கு ஸ்டெல்லா கண்ணகி என்பவர் 4வது மனைவி என்றால் சரிதான். அ.சா.1ன் 2வது மனைவி மட்டும் இறந்துவிட்டார் மற்ற மனைவிகள் உயிருடன் உள்ளார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. 2வது மனைவிக்கு 5 பெண் குழந்தைகள் என தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. அ.சா.1 சமத்துவபுரம் நுழைவு வாயில் தென்புறத்தில் பெட்டிகடை வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். அ.சா.1ன் சொந்த ஊர் V. பெருமாள்பட்டி என்றால் அது தெரியாது. புகாரில் மருத்துவமனைக்கு சரவணன் என்பவர் அழைத்து சென்றதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் அ.சா. 1 ன் பிள்ளைகளை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 னிடம் வாக்குமூலம் வாங்க நான் மட்டும் தான் சென்றேன். அந்த வாக்குமூலம் கைப்பட எழுதப்பட்டது என்றால் சரிதான்.

4) சான்றுபொருள் கத்தி சம்பவ நடந்தஅன்றே கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். அத்தாட்சியில் சான்றுபொருளான கத்தியை வழக்கின் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த கத்தியை எதிரி பயன்படுத்தினாரா என்பதை கண்டறியும் பொருட்டு கைரேகை நிபுணருக்கு எதுவும் அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை. அந்த கத்தியில் ஏதேனும் இரத்தம் படிந்திருந்ததா என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. அ.சா.1 இரத்தம்பட்ட அவரது ஆடை எதுவும் என்னிடம் ஒப்படைத்தாரா என்றால் இல்லை. அ.சா.1ற்கு அவரது 4வது மனைவிக்கும் 15 வயது வித்தியாசம் என்றால் அதுபற்றி தெரியவில்லை. ஸ்டெல்லா கண்ணகி எனது விசாரணையில்அவரது கணவரான அ.சா 1 பெட்டிகடை வைத்து மது விற்றதாக எதுவும் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 எதிரியுடன் பேசக்கூடாது என சந்தேகப்பட்டு ஸ்டெல்லா கண்ணிகியிடம் சொன்னதாக எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

5) அ.சா.1 அவரது மனைவியை சந்தேகப்பட்டு சண்டை போட்ட போது அவரது வீட்டின் முன்பிருந்த தண்ணீர் பைப்பில் தடுமாறி விழுந்ததில் அவருக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 ன் உடன்பிறந்த சகோதரர் பழனிசாமி என்பவர் சார்பு ஆய்வாளராக உள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. எதிரியானவர் மிரட்டியதால் பயம் ஏற்பட்டதாக புகாரில்

சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியானவர் அசிங்கமாக பேசியதாக அருகில் இருந்தவர்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் அ.சா.1 அவரை அவரது பக்கத்து கடைக்காரான ராமர் அவரை சிகிச்சைக்கு அளித்து சென்றதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. புகார்தாரர் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரியின் மீது சந்தேகம்பட்டு கொடுக்கப்பட்ட புகாரை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ சாட்சிகளை விசாரணை செய்யாமலும் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சான்று பொருளான பட்டன் கத்தி வெளி கடைகளில் கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரிதான்.

S.d./Balasubramani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.